**கவனிக்க.**- *07.04.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2015 - 2017 අප්‍රේල් මස 12 වැනි බදාදා - 2017.04.12

*2015 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *672* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *680* |


**கவனிக்க.**- புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஒய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஒய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஒய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஒய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஒய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

***7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :***

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

***8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :***

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களம்

மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பத் தரம் III இற்கு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017

(வெற்றிட எண்ணிக்கை - 1)

விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்துக்கு இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :**

**1.1 கல்வித் தகைமைகள் :**

1.1.1 சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (6) கல்விப் பொதுத்தராதர (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

1.1.2 விஞ்ஞானம்/ கணிதப் பாட விதானத்திற் குரியதாக 3 பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**1.2 தொழில்சார் தகைமைகள் :**

1.2.1 மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

1.2.2 தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

1.2.3 கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

1.2.4 இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

1.2.5 இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் I ஆம் பகுதியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் ;

அல்லது

1.2.6 தொழிற்துறைக்குரியதாக தேசிய தொழில்சார் திறமை (NVQ) மட்டம் 6 இல் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

1.2.7 உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ் வழங்கும் நிறுவனங்களினால் வினவி கருத்துக்கள் பெற்றுக் கொண்டதன் பின்னர், மேற்கூறப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்குரிய சகல மட்டங்களுக்கும் சமமானது என்று மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தொழில்நுட்பக் கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**1.3 உடற்றகைமைகள் :**

1.3.1 சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதியளவு உடல், உள தேகாரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**1.4 ஏனைய தகைமைகள் :**

1.4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

1.4.2 சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

1.4.3 பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் 2017.01.01 ஆந் திகதியன்று சகல முறைகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

1.4.4 ஏதேனும் சமய பீடத்தின் சமயத் தலைவராக இருக்கும் எவரும் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற தகைமையற்றவராவர்.

2.(i) ***சம்பள அளவுத்திட்டம்***.- ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550.
2020.01.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இற்கமைய.

(ii) ***சம்பள மட்டம்***.- (MN-3-2016)

3. **பொதுவான நிபந்தனைகள் :**

3.1 ***வயதெல்லை***.- 2017.01.01 ஆந் திகதியன்று 18 வயதைவிடக் குறையாமலும் 30 வயதைவிட மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

3.2 ***ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :***

3.2.1 எழுத்துமூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புகள் செய்யப்படும்.

3.2.1.1 *பரீட்சை ஒழுங்குவிதி முறைகள்*.- இப்பரீட்சை இரண்டு பாடங்களைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது.

| | சித்தி அடைவதற்காகப் பெற வேண்டிய மொத்தப் புள்ளிகள் | பெற வேண்டிய குறைந்த பட்ச புள்ளி விகிதாசார அளவு | காலம் |
|---|---|---|---|
| (i) நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% | 1 மணித்தியாலம் |
| (ii) பாட இணைத் தொழில்நுட்ப வினாப் பத்திரம் | 100 | 40% | 3 மணித்தியாலம் |

3.2.1.2 *பாட விதானம் :*

(i) நுண்ணறிவுப் பரீட்சை.- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியிலான சிந்தனையை அளவீடு செய்து பகுப்பாய்விற்குட்படுத்தி தீர்மானிக்கும் சக்தியினைக் கண்டறியும் வகையில் இந்தக் கேள்வி அமைந்திருக்கும் ;

(ii) பாட இணை தொழில்நுட்ப வினாப்பத்திரம் :

(அ) கட்டிட நிர்மாணிப்பு :

(i) செங்கல் கட்டுமானம் மற்றும் கருங்கல் கட்டுமானம் (பொருத்துதல்கள், ஆச்சி, லின்டர்ஸ், அடிமட்டம்) ;

(ii) சீமெந்துக் கலவை வகை, சீமெந்து பூசுதல், கொங்கிரீட் கலவை ;

(iii) பல்வேறுபட்ட வகைகளைப் பொருத்துதல்கள், சட்டம் அடித்தல், உருக்கு பொருத்துதல், பலகைகளைப் பொருத்துதல் போன்றன ;

(iv) பல்வேறுபட்ட வகைகளைக் கொண்ட கூரைகள் (ஓடு, அஸ்பஸ்டோஸ், தகடு, அலுமீனியத் தகடு, சிங்கள ஓடு, பிளேட் கொங்கிரீட் இடல் ;

(v) மண் வேலைகள் (மட்டப்படுத்தல், மட்டம் எடுத்தல், தரம்) ;

(vi) கட்டுமான நிர்மாணிப்பு மற்றும் வாய்க்கால் தொகுதி.

(ஆ) வர்ணம் பூசுதல்.- பல்வேறு வகையிலான வர்ணங்களைக் கலவை செய்தல், சுவர்களுக்கு வர்ணம் பூசுதல், தளபாடங்களுக்கு பொலிஸ்ட் இடல், வார்னிஷ் பூசுதல், துருப்பிடிக்காத வர்ணங்களைப் பூசுதல், அச்சு வர்ணங்களைப் பூசுதல் போன்றன.

(இ) மரங்களை வகைப்படுத்தல், அவற்றைப் பதப்படுத்தல், சுவர் மற்றும் நிலத்திற்கு ஒட்டப்படும் டெரோசோ, பீங்கான், செங்கல் இடுவதற்கான அறிவு.

(ஈ) வழங்கப்படும் குறிப்புகளுக்கமைய உரிய வேலைகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

(உ) அளவுப் படிவங்களுக்கு ஏற்றவாறு கட்டணப் பட்டியல்களைத் தயாரிக்கும் செயற்பாடுகள்.

(ஊ) அடிப்படை நீர் வழங்கல் மற்றும் நீர் கொண்டு செல்லல், சிறிய அளவிலான கட்டிடங்களுக்காக குழாய் நீர், கழிவு நீர்க் குழாய்களைப் பொருத்துதல், கழிவு நீர் அனுப்பப்படும் குழிகளை நிர்மாணித்தல், நீர் அச்சு உபகரணங்கள், நீர்த் தாங்கி மற்றும் கிணறுகள் போன்றன.

3.2.1.3 ***பொதுவான நேர்முகப் பரீட்சை.***- எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையாகும். (புள்ளி வழங்கப்பட மாட்டாது.)

**4. தெரிவுசெய்யும் முறை :**

4.1 எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய கூடுதலான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் மூலம் வெற்றிடத்தை நிரப்ப எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, பெறுபேறுகளின் திறமைத் தொடருக்கமைய சேர்த்துக்கொள்ளப்படும். (நேர்முகப் பரீட்சையில் அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்த முடியாத விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் உரிய திறமை மட்டத்தைப் பெற்றிருந்த போதிலும் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.)

**5. விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல்/ விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்தல் :**

5.1 விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்க வேண்டியது தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாகும் ;

5.2 சிங்களம் அல்லது தமிழில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் தலைப்பில் குறிப்பிடும் பரீட்சையின் பெயரை அம்மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும் ;

5.3 இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 அளவு தாளில் விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் வேண்டும் ;

5.4 விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரச கல்லூரியின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையில் அதிகாரி அந்தஸ்திலுள்ள உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 இன் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டத்தில் அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5.5 ***தவறான தகவல்களை வழங்குதல்.***- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது என அறிந்தே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அல்லது எவையேனும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தெரிந்தே மூடிமறைத்திருப்பதாக தெரியவரும் பட்சத்தில் பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச்செய்யவும், சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் அது தெரியவரும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்கவும் இடமுண்டு.

**6. விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் :**

6.1 விண்ணப்பதாரர்களினால் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2017.04.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பவும் ;

6.2 விண்ணப்பப்படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் :-

பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களம்,
இலக்கம் 9, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7.

6.3 விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பத் தரம் III இற்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்ளல்" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும் ;

6.4 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற் படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

7. **விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றலும் அனுமதி அட்டைகளை வழங்குதலும் :**

7.1 உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யாமையினால் ஏற்படக்கூடிய பாதிப்பை விண்ணப்பதாரியே ஏற்றுக் கொள்ள வேண்டும் ;

7.2 விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் குறித்து கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8. **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

8.1 இப்பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் இடம் என்பன தகைமை கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும் ;

8.2 பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்திலுள்ள பெயரை கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். பரீட்சை மத்திய நிலையத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தை உறுதிப் படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் பரீட்சைக்குத் தோற்ற தங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் ;

8.3 பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை நடாத்தும் நிறுவனத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அச்சட்டங்களை மீறும் பட்சத்தில் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு பரீட்சார்த்தி உட்பட வேண்டும்.

9. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.**- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக்கூடிய வகையில் விண்ணப்பதாரர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காகக் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

10. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது தொடர்பில் விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை சட்ட ஒழுங்குகளுக்கு அமைய செயற்படக் கட்டுப்பட்டுள்ளனர்.

11. சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழி மூலங்களில் ஒப்பீடு இன்மைகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக் கமைய உரிய தீர்மானங்கள் எடுக்கப்படும்.

12. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

12.1 இப்பதவி நிரந்தரமான ஓய்வூதிய சம்பளம் கொண்ட, ஓய்வூதிய சம்பள முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்கு உட்பட வேண்டும் ;

12.2 ***சேவை நிபந்தனைகள்.***- சகல நியமனங்கள் தொடர்பிலும் அரச சேவை ஆணைக் குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன ஒழுங்குக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கு உரியதாகும்.

13. தம்மால் அறிந்தே சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஒரு தகவல் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரியவரும் பட்சத்தில் விண்ணப்பதாரர் தெரிந்தே ஏதேனும் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை மறைத்திருப்பதாகத் தெரியவரும் பட்சத்தில் இன்றேல் பொருத்தமற்றவர் என சேவையாற்றும் காலத்திற்குள் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

எஸ். ஈ. ஆர். டி. எம். எஸ். பி. பண்டார,
பணிப்பாளர் நாயகம்.

விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களம்,
இலக்கம் 9,
பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7,
2017, மாச்சு 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களம்**

**மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் தரம் III இற்கு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

1. முழுப்பெயர் :----.

2. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : (GUNAWARDHANA M. G. B. S. K.)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

4. பால் :
ஆண் - 0
பெண் - 1
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

5. நிரந்தர முகவரி :

(அ) நிரந்தர வதிவிடத்திற்கான மாவட்டம் :----.
(ஆ) பிரதேச செயலகப் பிரிவு :----.
(இ) தொலைபேசி இலக்கம் :----.

6. (அ) பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

(ஆ) 2017.01.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. திருமணமானவரா/ திருமணமாகாதவரா ? :
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2
(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

8. தேசிய இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, ஏனையவர்கள்-3)

(கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

9. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இலக்கம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
ஆண்டு :----.
பரீட்சை இலக்கம் :----.

| தொடர் இலக்கம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. தொழில் தகைமை/ தொழில்நுட்பத் தகைமை (உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கவும்) :

10.1 பெற்றுள்ள டிப்ளோமா :----.

10.2 உரிய டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் : ----.

10.3 உரிய டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி : ----.

10.4 உரிய டிப்ளோமாவின் (NVQ) மட்டம் :----.

11. ஏனைய தகைமைகள் :----.

12. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டனை பெற்று அல்லது தற்போது தங்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நீதிமன்றச் செயற்பாடுகள் காணப்படுகின்றதா ? (ஆம்/ இல்லை) :----.

12.1 ஆமெனின், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

13. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப் பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவகையில் உண்மையானதும் சரியானதும் என கௌரவமாய் தெரிவிக்கின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் வெளிப்பாடுகள் உண்மைக்குப் புறம்பானது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் நான் சேவையில் சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் தகைமை அற்றவராக மற்றும் நியமனம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அவ்வாறு உறுதிப்படுத் தப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

(இ) மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் விதிக் கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றியமைக்க மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் ................ ....................... பெயர் கொண்டவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும், அவர் .................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

4-408

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சில் நிறைவேற்றுச் சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சில் நிறைவேற்றுச் சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகளின் எண்ணிக்கை - 01

1. **ஆட்சேர்ப்புத் திட்டம்.**- அறிவித்தலில் குறிப்பிடப்பட் டுள்ள தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இல. 6 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கும் திட்டத்திற்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **அவசியமான தகைமைகள் :**

(i) ***கல்வி/ வாழ்க்கைத் தொழில் தகைமைகள்.***- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) ***அனுபவம்.***- சத்தியப்பிரமாணம் செய்த பின் சட்டத் தரணி ஒருவராக மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத முனைப்பான தொழில்சார் அனுப வத்தைப் பெற்றிருத்தல்.

(iii) ***உடல் தகைமைகள்.***- விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iv) ***பிற தகைமைகள் :***

* இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
* சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
* பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான எல்லாத் தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பம் கோருவதற்கான அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் திகதிக்கு எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையது மாகும்.

(ii) நியமனம் 3 வருட நன்னடத்தைக் காலத்திற்குட்பட்ட தாகும். சட்ட அலுவலர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 3 வருட காலத்துள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு I ஆவது வினைத் திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 07/ 2007 இன் பிரகாரமும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக் கைகளின் பிரகாரமும் பதவியில் இணைந்து

5 வருட காலத்துள் சேவையில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் போதிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அரச கரும மொழி அல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் இணைந்த அலுவலர்கள் தமது நன்னடத்தை தகுதிகாண் காலத்துள் குறித்த அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள், தாபன விதிக்கோவையின் உறுப்புரைகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் திணைக்கள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும், அரசாங்கத்தினால் தற்போது வெளியிடப்பட்டுள்ளதும் காலத்திற்குக்காலம் வெளியிடப்படுகின்றதுமான பிற பணிப்புரைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்தொழுகுதல் வேண்டும்.

*4.* **வயதெல்லை.**- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 மாதாந்த சம்பள அளவுத்திட்டமொன்று இப்பதவிக்கு உரித்தாகும். (பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இற்கமைய).

6. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குப் பின்வரும் புள்ளி வழங்கும் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும் :

| *இல.* | *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|
| 1. | மேலதிகக் கல்வித் தகைமைகள் | 20 |
| 2. | மேலதிக தொழில்சார் தகைமைகள் | 15 |
| 3. | மேலதிக அனுபவங்கள் (வாழ்க்கைத் தொழில் தகைமைகளின் கீழ் சட்டத்தரணி ஒருவர் என்ற வகையில் அவசியமாகின்ற 3 வருடகால ஆகக் குறைந்தபட்ச சேவைக்காலத்திற்கு மேலதிகமாக) | 30 (வருடமொன்றுக்கு 5 புள்ளிகள்) |
| 4. | ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 |
| 5. | தகவல் தொழில்நுட்பவியல் பற்றிய அறிவு | 15 |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டிய திறமை | 05 |
| | மொத்தம் | 100 |

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- எல்லா வகையிலும் பூர்த்தியான விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்திருக்கும் பரீட்சார்த்திகள் மட்டும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எல்லாச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளையும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆளடையாளப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

*8.* **விண்ணப்பித்தல் :**

(அ) விண்ணப்பப்படிவங்கள் 2017, மே மாதம் 5 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு,
இல. 356, காலி வீதி,
கொழும்பு 3.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியமைப்பு இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை A4 அளவிலான தாளில் (அதன் முதற்பக்கத்தை இல. 1 முதல் 6 வரைக்கும், 2 ஆவது பக்கத்தை இல. 7 முதல் 10 வரைக்கும், 3 ஆவது பக்கத்தை இல. 11 முதல் 12.2 வரைக்கும் என்ற வகையில்) தயாரித்து தமது கையெழுத்தில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடப்பக்க மேல் மூலையில் "சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சில் நிறைவேற்றுச் சேவை வகுதியின்

சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை அதிபரொருவர்/ சமாதான நீதவானொருவர்/ சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர்/சட்டத்தரணி ஒருவர்/பிரசித்த நொத்தாரிசு ஒருவர்/முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர் ஒருவர் அல்லது ரூபா 47,615 மாதாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க நிரந்தரப் பதவியொன்றை வகிக்கின்ற அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் தலைவர் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தைத் தழுவி அமையாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் பற்றி கருத்திற்கொள்ளப்பட மாட்டா.

9. **பிழையான தகவல்களை வழங்கல்.**- தங்களால் அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் உண்மைக்குப் புறம்பானதென்றோ அல்லது தவறானதென்றோ ஆட்சேர்ப்பிற்கு முன்னர் தெரியவரின், தங்கள் பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். அவ்வாறான போலியான அல்லது தவறான தகவலொன்று பற்றி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் தெரியவரின், உரிய நடவடிக்கை முறையைப் பின்பற்றி பணிநீக்கம் செய்யப்படும். இப்பதவிக்கான ஆட்சேர்ப்பையும் நியமனத்தையும் அமுல்படுத்துவது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படும்.

10. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையையும் மேலதிக விபரங்களையும் இவ்வமைச்சின் www.resettlementmin.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,
புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சில் நிறைவேற்றுச் சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

இல. ..................................
(அலுவலகப் பாவனைக்கு)

1. முதலெழுத்துக்களுடனான பெயர் (திரு./ திருமதி/ செல்வி) :-
சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

1.1 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் (தெளிவான கையெழுத்தில்) :
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :----.

3. பிறந்த திகதி :
வருடம் :----, மாதம் :----, திகதி :----.

3.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் :---, மாதங்கள் :---, நாட்கள் :---.

4. பால் நிலை (ஆண்-M, பெண்-F) :- ☐

5. நிரந்தர முகவரி (தெளிவான கையெழுத்துக்களில்) :
----.

6. தொலைபேசி இலக்கம் :
நிலையான :----.
கையடக்க :----.

7. கல்வித் தகைமைகள் :

7.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) சித்தியடைந்த பாடங்கள் :-

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

7.2 பெற்றுக்கொண்ட பட்டம் பற்றிய விபரங்கள் :

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் பெற்ற வருடம் :----.
(iii) பெற்றுக்கொண்ட பட்டம் :----.

8. அனுபவம் :

(i) உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராகப் பணி யாற்றியுள்ள காலம் :----.

9. தாங்கள் எப்பொழுதாவது, ஏதேனும் குற்றச்சாட்டுக்கு நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள் ளீரா ? ஆம்/இல்லை.

9.1 ஆமெனின், விபரிக்கவும் :----.

10. விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்தல் :

(அ) இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள வெளிப்படுத்துகை உண்மைக்குப் புறம்பானதென நிருபிக் கப்படுமாயின், நான் சேவைக்கு உள்ளீர்க்கப் படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்ப தையும் நியமனம் கிடைத்த பின் அவ்வாறு நிருபிக்கப்படுமாயின், பணி நீக்கம் செய்யப் படுவதற்கு உள்ளாவேன் என்பதையும் அறிவேன்.

(இ) இதனகத்துள்ள தகவல் எதனையும் பின்பு மாற்றியமைக்க மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் ............. ....................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ............ .......................... ஆந் திகதி எனது முன்னிலையில் மேற்படி பந்தி 10 இன்கீழ் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி வழி இலச்சினை மூலம் உறுதிப்படுத்தவும்) :

12. திணைக்களத் தலைவரின் சிபார்சு :
(அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்)

12.1 அலுவலரின் பெயர்வழிக் கோப்பின்படி விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடனடுத்த ஐந்து வருட காலத்துள் வேலை, நடத்தை, வருகை என்பன திருப்திகரமானது/ திருப்திகரமற்றது. சகல சம்பள ஏற்றங்களும் ஈட்டப்பட்டுள்ளன/ ஈட்டப்படவில்லை. எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை/ உட்படுத்தப்பட்டுள்ளது.

12.2 விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்படின், தற்போதைய பதவியிலிருந்து இந்த அலுவலரை விடுவிக்க முடியும்/ முடியாது. விண்ணப் பப்படிவத்தைச் சிபார்சு செய்கின்றேன்/சிபார்சு செய்யவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி வழி இலச்சினையும்.

திகதி :----.

4-503

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

### இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை -2016 (II) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2017 (I)

இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது

வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2016 (II) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2017 (I) ஆனது அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கண்காணிப்பு மற்றும் வழிநடாத்தல் என்பவற்றின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தினால் 2017.05.20 ஆந் திகதி முதல் 2017.07.22 ஆந் திகதிவரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. மேற்படி சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைபெறும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீடு |
|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | SLAS 1 |
| 2 | இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | SLES |
| 3 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | SLSS |
| 4 | இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | SLArS |
| 5 | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | SLAcS 1 |
| 6 | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | SLPS 1 |
| 7 | மேற்குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமான ஏனைய சேவைகள் | Other |
| 8 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | SLAS 2 |
| 9 | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | SLAcS 2 |
| 10 | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | SLPS 2 |

3. அலுவலர் தாம் விரும்பிய ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாக மற்றும் ஒன்றுக்கொன்று முரணான தடவைகளில் தோற்றலாம். ஆயினும், விதித்துள்ள காலப்பகுதியினுள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் அவசியமாகும்.

4. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டத்தினை மீறும் சந்தர்ப்பத்தில் ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இணையத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இனுள் பிரவேசிப்பதன் மூலம் மட்டுமே நிகழ்த்த முடியும். இணையத்தளத்தின் பிரதான முகப் பக்கத்தில் வலது பக்கமுள்ள பட்டியலில் "Apply Online" என்னும் பகுதிக்குப் பிரவேசித்து தமக்குரிய பரீட்சையினைத் தெரிவுசெய்வதன் மூலம் விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்பிக்கொள்ள முடியும்.

பரீட்சை விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்புவதற்கு 2017.04.12 ஆந் திகதி மு. ப. 8.00 தொடக்கம் 2017.05.02 ஆந் திகதி இரவு 12.00 வரையான காலப்பகுதியினுள் மட்டுமே பூரணப்படுத்த முடியும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்**.- முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் எந்தவித பரீட்சைக் கட்டணங்களையும் செலுத்த வேண்டியதில்லை. இதற்கு முன்னர் பரீட்சார்த்தி ஒருவர் விண்ணப்பத்தினை மேற்கொண்டு

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அனுமதி ஒன்று வழங்கிய பின்னருங்கூட அப்பரீட்சைக்குத் தோற்றியிராத அத்தகைய நிலைமைகளில் அதனைப் பரீட்சைக்குத் தோற்றியதாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்கள் பின்வரும் விதத்தில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

இலங்கை நிர்வாக சேவையின், இலங்கை கணக்காளர் சேவையின் மற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை ஒரு பரீட்சை என்றும், இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை இன்னொரு பரீட்சை என்றும் கருதி பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினை பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இலங்கைப் பொறியியல் சேவையின், இலங்கை விஞ்ஞான சேவையின் மற்றும் இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

"SLIDA" கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நாடு முழுவதிலுமுள்ள ஏதேனுமொரு அஞ்சல் அலுவலகத்தின் மூலம் (உப அஞ்சல் அலுவலகங்கள் நீங்கலாக) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம், விண்ணப்பத்தின் உரிய கூட்டில் குறிப்பிடப்படல் வேண்டும். "SLIDA" கணக்கிற்கு பணத்தினைச் செலுத்துவதற்காக உள்நாட்டுத் தந்திக் காசுக் கட்டளை விண்ணப்பத்தினை (மாதிரி 85) நிரப்பும்போது "SLIDA" என்பது பெறுநராகக் குறிப்பிடப்பட வேண்டும். அதேவேளை உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரானது பெறுநரின் முகவரிக்கான இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். (பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டவாறு குறியீட்டுப் பெயர்கள் அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணத்தினை வரவு வைக்கும்போது அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் அனுப்புபவரின் முகவரிக்கான இடத்தில் விண்ணப்பதாரியின் தே. அ. அ. (NIC) இலக்கத்தையும் உள்ளடக்கி விண்ணப்பமானது நிரப்பப்படுதல் வேண்டும்.

**7. இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.**

இணையத்தில் நிகழ்நிலையில் (Online) நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்போது பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்படுத்தல் இலக்கம் (Confirmation Number) ஒன்று வழங்கப்படும் என்பதுடன் பரீட்சார்த்தி பின்னர் எழும் விசாரணைகளுக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும். உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது இணையத்தின் நிகழ்நிலை முறையினூடாக (Online) அனுப்பப்பட்டவுடன் பரீட்சார்த்திகள் அணுகுவழியினைக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் அவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையின் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றினைப் பெறல் வேண்டும் என்பதுடன் உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அந்த நோக்கத்திற்காக தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதி அலுவலரினால் தனது கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விதத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டையின் பிரதியொன்றைப் பரீட்சார்த்தியின் பிரத்தியேகக் கோவையில் இணைத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு.**- இணையத்தின் நிகழ்நிலையினூடாக (Online) விண்ணப்பத்தினை நிரப்பும்போது தனிப்பட்ட முகவரி, பணியாற்றும் நிறுவனம் மற்றும் அலுவலக முகவரி என்பன தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான செய்முறை தொடர்பிலான ஏதேனும் தெளிவூட்டல் தேவைப்படின் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு 2017.04.12 ஆந் திகதி முதல் 2017.05.02 ஆந் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணியிலிருந்து பி. ப. 4.30 மணிவரை இந்த இணைப்பின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்பட முடியும்.

9. அனுமதி அட்டைகளைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக கடமை விடுமுறையினைத் திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். அவர்களின் பரீட்சார்த்தித் தன்மையினை உறுதிப்படுத்த வேண்டுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இதனைச் செய்துகொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு போக்குவரத்துச் செலவினங்கள் வழங்கப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன்வைத்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்தியொருவர் தனக்கு உரித்துடையதற்ற மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக தெரியவருமாயின் அத்தகைய விண்ணப்பதாரியின் பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்தி அனுமதிக்கப்பட மாட்டார்.

12. **பரீட்சை நடைமுறை.**- ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலப்பகுதி மூன்று (3) மணித்தியாலங்களாகும். வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினைச் சித்தியெய்துவதற்குப் பரீட்சார்த்தி ஒருவர் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் :-

12.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய 1842/ 2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் “எ” வின் இணைப்பு ).

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை நிர்வாக சேவை அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | சட்டம் | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01-I |
| | | இலங்கையின் சட்டமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 01-II |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01-III |
| 2 | நிர்வாகம் | | 3 மணித்தியாலங்கள் | 02-I |
| 3 | பொருளியல் மற்றும் சமூகவியல் | | 3 மணித்தியாலங்கள் | 03 |
| 4 | அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு வழங்கல் செயற்பாடும் | | 3 மணித்தியாலங்கள் | 04 |

*12.1.1* ***சட்டம் :***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட மூன்று வினாப் பத்திரங்கள் :

***முதலாவது (I) வினாப்பத்திரம்.- அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் (பாட இலக்கம் 01-I) - (100 புள்ளிகள்) :***

(i) வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி உள்ளிட்ட இலங்கை அரசியலமைப்பின் கட்டமைப்பு மற்றும் 1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு
(ii) நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, பிரதம அமைச்சர், அமைச்சரவை மற்றும் அரசாங்க சேவை
(iii) நீதி நிர்வாகம்
(iv) நிர்வாகத்துடன் தொடர்பான நீதித்துறைக் கட்டுப்பாடு
(v) அரசாங்க கொள்கைகளுக்கான வழிகாட்டிக் கொள்கைகளும் அடிப்படைக் கடமைகளும்
(vi) கையளியதிகார வழிச்சட்டம்
(vii) அரசாங்கத்தினதும் அரச அதிகார சபைகளினதும் பொறுப்புக்கள்
(viii) அடிப்படை உரிமைகள்

***இரண்டாவது (II) வினாப்பத்திரம்.- இலங்கையில் சட்ட முறைகள் (பாட இலக்கம் 01-II) - (100 புள்ளிகள்) :***

(i) நீதி நிர்வாகம்
(ii) இலங்கையின் சட்ட வரலாறு
(iii) நீதிமன்ற அமைப்பு
(iv) இலங்கை நீதிமன்ற கட்டளைச் சட்டம் (6 ஆவது அத்தியாயம்)
(v) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிர்வாகச் சட்டம்

***மூன்றாவது (III) வினாப்பத்திரம்.- குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (பாட இலக்கம் 01-III) - (100 புள்ளிகள்) :***

(i) தண்டனைச் சட்டக்கோவை
(ii) சான்றுக் கட்டளைச் சட்டம்

பரீட்சார்த்தியொருவர் சட்டம் என்ற பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு சகல வினாப்பத்திரங்களிலும் ஆகக்குறைந்தது 35 புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகளில் சராசரியாக 40% இனையும் பெறுதல் வேண்டும்.

*12.1.2* ***நிர்வாகம் (பாட இலக்கம் 02 - I) - (100 புள்ளிகள்).-***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :

(i) அலுவலக, வெளிக்கள பணிகளை ஏற்பாடு செய்தலும் அமைப்பாண்மை முறைகளும்.
(ii) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் :

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII (அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்)

*12.1.3* ***பொருளியல் மற்றும் சமூகவியல் (பாட இலக்கம் 03) - (100 புள்ளிகள்).-***

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கும். முதலாவது (I) பகுதி வினாப்பத்திரம் - பொருளியல்

(i) பெறுமானம், உற்பத்தி மற்றும் விநியோக கொள்கைகளின்பால் விசேட கவனம் செலுத்திய பொருளாதாரக் கோட்பாடுகள் ;
(ii) நிதி, உற்பத்தி மற்றும் விநியோகம் ;
(iii) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு தொடர்பான அவதானம் மற்றும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணி மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

இரண்டாவது (II) பகுதி சமூகவியல் :

(i) சமூகக் கட்டமைப்பின் அமைப்பாண்மையும் பணிகளும் ;
(ii) மானிட உறவுகளும் தொகுமங்களும் ;
(iii) உறவு முறை, திருமணம் மற்றும் குடும்பம் ;
(iv) கிராமிய மற்றும் நகர்ப்புறச் சமூகம் ;
(v) சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும் ;
(vi) சமூகக் கட்டுப்பாடு ;
(vii) கலாச்சாரம், சமயம், ஒழுக்கம் மற்றும் விழுமியங்கள் ;

பொருளியல் மற்றும் சமூகவியல் பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக்குறைந்தது இருபது (20) புள்ளிகளைப் பரீட்சார்த்தி ஒருவர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**12.1.4 அரச துறை நிதி முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு வழங்கல் செயற்பாடும் - (பாட இலக்கம் 04) - (100 புள்ளிகள்).-**

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் நிதிக் கட்டுப்பாடு-

* அரசாங்க நிதி முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகள் ;
* அரசாங்க நிதி குறித்த பாராளுமன்றக் கட்டுப்பாடு ;
* நிதியம் என்பதன் கருத்து ;
* திரட்டிய நிதியமும் அதன் செயற்பாடும் ;
* ஒதுக்கீட்டின் நோக்கங்களும் ஒதுக்கீட்டு முறைமைகளும் ;
* எதிர்பாரா நிகழ்வுகளுக்கான நிதியம் ;
* பிற நிதிகளும் அவற்றின் தொழிற்பாடுகளும் ;
* அரசாங்க வருமானம் ;
* நிதி அமைச்சரின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும் ;
* திறைசேரியின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும் ;
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம் ;
* கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும் ;
* அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (COPA) ;
* அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு (COPE)

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், பிரதம கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானக் கணக்கீட்டு அலுவலர்களின் நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் கடமைப் பொறுப்புக்கள்/ வகைகூறல் மற்றும் பொறுப்புக்கூறலின் தன்மை ;
(iii) உள்ளகக் கணக்காய்வு
(iv) அரசாங்க செலவுகளைத் திட்டமிடலும் முகாமைத்துவம் செய்தலும்-

* அமைப்புக்களின் நோக்கங்களையும் கடமைப் பொறுப்புக்களையும் இனங்காணல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், குறி இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல்
* அபிவிருத்திக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் மதிப்பீட்டு முன்னுரிமை வழங்கலும்
* ஆண்டு வருவாய் மற்றும் செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இறுதி முடிவெடுத்தலும்

(v) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களைச் செய்தல்-

* வீரமொங் நடவடிக்கை முறையைச் செயற்படுத்துதல்
* அரச துறையின் பதவியணிகள் மற்றும் சம்பள முகாமைத்துவம்
* மொத்தக் கிரய மதிப்பீடுகளும் அவற்றை மீளமைத்தலும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் கைவிடல்களும்

(vii) பல்வேறு கணக்குச் செலவுகள்

(viii) நிதி முகாமைக்கான பணிகளைப் பொறுப்பளித்தல்

(ix) அரச நிதியின் பொறுப்பும் வங்கிக் கணக்கு நடைமுறையும்

(x) அரசாங்க கொள்வனவு - வழங்கல் நடைமுறை

* அரசாங்கக் கொள்வனவு - வழங்கல் பணிக்கோவை

* அரசாங்க கொள்வனவு - வழங்கல் வழிகாட்டல் கோவை

12.2 இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2013.11.11 ஆந் திகதிய 1836/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைப் பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை "iii")

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை பொறியியல் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடங்கள் கீழ்வருமாறு :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-II |
| 2 | நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 05-I |
| 3 | திணைக்கள/ தாபன முறைமைகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. | |

ஒவ்வொரு பாடத்தினையும் சித்தியெய்துவதற்கு குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.2.1 ***நிர்வாகம் - (பாட இலக்கம் 02-II) - (100 புள்ளிகள்).*** - 1985 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி I மற்றும் 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி II இலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாடுகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்.

12.2.2 ***நிதி முறைகள் - (பாட இலக்கம் 05-I) - (100 புள்ளிகள்).*** - அத்தியாயம் IX மற்றும் X தவிர 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணங்களிலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் தேசிய பெறுகை வழிகாட்டலுக்கான தகுதிவிதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்.

12.3 இலங்கை விஞ்ஞான சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4) மற்றும்

இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4).

இப்பரீட்சைகளுக்கான பாடங்கள் பின்வருமாறு காணப்படுகின்றது :

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 05-II |
| நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-III |
| திணைக்கள ஒழுங்குவிதிகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. | |

12.3.1 ***நிதி முறைமைகள்.- (பாட இலக்கம் 05-II) - (100 புள்ளிகள்).-***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் நிதிக் கட்டுப்பாடு-

* அரச நிதி முகாமைத்துவம் தொடர்புபட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகள்
* அரச நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு
* நிதியம் என்பதன் கருத்து
* திரட்டு நிதியமும் அதன் தொழிற்பாடும்
* ஒதுக்கீட்டின் குறிக்கோளும் முறைகளும்
* எதிர்பாராச் செலவு நிதியம்
* ஏனைய நிதியங்களும் அவற்றின் தொழிற்பாடும்
* அரசிறை
* நிதி அமைச்சரின் அதிகாரங்களும் வகிபங்குகளும்
* திறைசேரியின் அதிகாரங்களும், வகிபங்குகளும்
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம்
* கணக்காய்வாளர் நாயகமும் அவரின் அதிகாரங்களும் வகிபங்குகளும்
* அரச கணக்குக் குழு (COPA)
* அரச தொழில் முயற்சிக்குழு (COPE)

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானக் கணக்கீட்டு அலுவலர்களின் நியமனங்கள், அவ் அலுவலர்களின் அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள்/ பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தன்மை.

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவினங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்-

* அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை இனங்காணல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல்
* அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் மதிப்பிடுதலும் மற்றும் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தலும்
* வருடாந்த வருமானம் மற்றும் செலவுகளின் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளல்-

* வீ ரமன் நடைமுறையினை அமுல்படுத்துதல்
* அரச துறையின் பதவியணி மற்றும் சம்பள முகாமைத்துவம்
* மொத்தச் செலவு மதிப்பீடுகளும் திருத்தங்களும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் உரிமைக் கைவிடல்களும்

(vii) நானாவித கணக்கீட்டு விடயங்கள்

(viii) நிதி முகாமைத்துவத்திற்கான தொழிற்பாடுகளைக் கையளித்தல்
(ix) அரச நிதியின் கட்டுக்காப்பும் வங்கிக் கணக்குகளின் நடைமுறையும்
(x) அரசாங்க பெறுகைச் செயன்முறை-

* அரசாங்கப் பெறுகை நடைமுறைக் கோவை
* அரசாங்கப் பெறுகை வழிகாட்டல்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.3.2 ***நிர்வாகம்.- (பாட இலக்கம் 02-III) - (100 புள்ளிகள்).-***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள்-

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII,

(ii) 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.4 இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 3 ஆவது பின்னிணைப்பு)

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1. | அரசாங்க நிதி நடைமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 06 |
| 2. | சட்டமும் முகாமையும் | 3 மணித்தியாலங்கள் | 07 |
| 3. | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-IV |
| 4. | அறிக்கை எழுதுதலும் முகாமைக்குத் தகவல் வழங்குதலும் | 3 மணித்தியாலங்கள் | 08 |

12.4.1 ***அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் 06) - (100 புள்ளிகள்).-*** நிதி ஒழுங்குவிதிகளின் பிரயோகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், திறைசேரியின் சுற்றறிக்கைகள், வருமானம், செலவினம், வெளிநாட்டு உதவி, வருடாந்த மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு, அரச படுகடன் வழங்கல், கேள்விப்பத்திரங்கள், கட்டுநிதிகள் மற்றும் முற்பணங்கள், நாட்டின் கணக்கு, தொழிற்பாட்டு மற்றும் பொருளாதார வகுப்பாக்கங்கள், வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டமும் செயலாற்றுகையும், நிதி அமைச்சரின் பணிகள், பொதுத் திறைசேரி, நிதி அமைச்சு, செயலாளர்கள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அரச கணக்குகள் குழு தொடர்பான அரச நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரியின் சுற்றறிக்கைப் பயன்படுத்தப்படும் முறைமை தொடர்பாகவும் பரீட்சார்த்திகள் பரிசோதிக்கப்படுவர்.

12.4.2 ***சட்டமும் முகாமைத்துவமும் (பாட இலக்கம் - 07) - (100 புள்ளிகள்)***

**சட்டம்** : சட்டத்தின் வரைவிலக்கணம் -

இலங்கையின் சட்ட முறைமைகள்
இலங்கையின் நீதிமன்ற முறைமைகள்
ஒப்பந்தச் சட்டம்
முகவராண்மைச் சட்டம்

பொருட்களின் விற்பனை
வாடகைக் கொள்வனவு
பேரம் பேச்சுவார்த்தை சாதனங்கள்
பிணையங்களின் உத்தரவாதம்
காப்புறுதி

**முகாமைத்துவம் :**

முகாமைக்கான அறிமுகம்
முகாமையாளர்களினது பணிகளும் தேர்ச்சிகளும்
திட்டமிடல் செய்முறையும் மற்றும் அமைப்பு நிலைகளை உருவாக்கல்
அமைப்புக் கட்டமைப்பு
மனித வள முகாமைத்துவம்
செயலாற்றுகை மதிப்பீடு
ஊக்குவிப்பு
உள்நோக்கம்
தலைமைத்துவம்
தொடர்பாடல்
தீர்மானம் எடுத்தல்
பிரச்சினைகளைத் தீர்த்தல்
மாறுபட்ட முகாமைத்துவம்
முகாமைத்துவ முரண்பாடுகள்
முகாமைத்துவக் காலம்
தரச் சுழற்சி, உற்பத்தி மற்றும் விளைவு
முகாமைத்துவ நெறிமுறைகள் மற்றும் பொறுப்புக்கள்

12.4.3 ***நிர்வாகம் (பாட இலக்கம் 02-IV) - (100 புள்ளிகள்) :***

தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் :

VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

மற்றும்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியின் முதலாவது வகுதியின் I தொடக்கம் VI வரையான அத்தியாயங்கள்

12.4.4 ***அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை முன்வைத்தல் (பாட இலக்கம் 08) - (100 புள்ளிகள்) :***

முகாமைத்துவ தகவல்கள் தொடர்பாக காலத்திற்கேற்ற வகையில் உண்மைத் தன்மை மற்றும் முழுமைத் தன்மையின் முக்கியத்துவம்
கணினிப் பயன்பாட்டின் உதவி
காலாந்தர நிமித்த காரண அறிக்கை
கூட்ட அறிக்கை மற்றும் குறிப்பெடுத்தல்
முகாமைத்துவ அறிக்கைக் கட்டமைப்பு
விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விளைவுகள்
பயன்பாட்டின் பொருள் விளக்கம்
மாறிகள் தொடர்பாக கருத்து தெரிவித்தல்
தரவுப் பகுப்பாய்வின் புள்ளிவிபரமுறைப் பயன்பாடு
செயலாற்றுகையினை ஒப்பீடு செய்தல்
முகாமைத்துவ அறிக்கைகளில் விகிதங்கள் மற்றும் சதவீதப் பயன்பாடு
கோட்டுச் சித்திரங்கள் மூலம் குறித்துக்காட்டல்
தொழில்சார் உரைகள் மற்றும் விரிவுரைகளுக்கு செவிமடுத்தல்
விடயம்சார் குழுக்களின் கலந்துரையாடல்
பேரவையின் திறமைகள்
உரைகளை நடாத்துதல்

**குறிப்பு**.- சித்தியெய்துவதற்காக விண்ணப்பதாரிகள் சகல வினாப்பத்திரங்களிலும் 40% ஆன புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.5 இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய மற்றும் 1670/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பின் "இ" பின்னிணைப்பு)

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை திட்டமிடல் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| *தொடர் இலக்கம்* | *பாடம்* | *காலம்* | *பாட இலக்கம்* |
|---|---|---|---|
| 1. | திட்டமிடல் எண்ணக்கருக்கள் மற்றும் செயல்முறையியல், திட்ட மிடல் நிறுவனங்கள் | 03 மணித்தியாலங்கள் | 09 |
| 2. | பொருளாதார பகுப்பாய்வு மற்றும் புள்ளிவிபரம் | 03 மணித்தியாலங்கள் | 10 |
| 3. | செயற்திட்டத் திட்டமிடல், அமுல் நடாத்துதல், தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு | 03 மணித்தியாலங்கள் | 11 |
| 4. | நிறுவன ரீதியான ஒழுங்குவிதிகள் மற்றும் அரசதுறை நிதியியல் முறைமைகள் | 03 மணித்தியாலங்கள் | 12 |
| 5. | ஆங்கில மொழி | 03 மணித்தியாலங்கள் | 13 |

12.5.1 சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் நியமனக் கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த கால எல்லையினுள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையினை சித்தியெய்தியிருத்தல் வேண்டும் என்பதோடு, சகல பாடங்களிலும் ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு பாடங்களுக்கு பல தடவைகளில் தோற்றுவதற்கு அலுவலரொருவருக்கு அனுமதி உண்டு.

**பரீட்சை நடைமுறைகள் :**

12.5.2 ***திட்டமிடல் எண்ணக் கருக்கள், செயல்முறையியல் மற்றும் திட்டமிடல் நிறுவனங்கள் (பாட இலக்கம் 09) - (100 புள்ளிகள்) :***

(i) தேசிய குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள் மற்றும் அவைகளை அடைவதற்கான கொள்கை கட்டமைப்பும் நிகழ்ச்சித் திட்டங்களும் ;

(ii) தேசிய திட்டமிடலுக்கான செயல்முறையியல், திட்டமிடலிலுள்ள பாரிய சிக்கல் கொண்ட விடயங்கள், பொது மக்கள் பங்கேற்பு மற்றும் வளங்களைப் பயன்படுத்தல் போன்றவை ;

(iii) தேசிய திட்டமிடலுக்கான தன்மையும் மூலங்களும், தரவுச் சேகரிப்பு, பொருட்கோடல், பகுப்பாய்வு, வெளிக்கள மேற்பார்வை மற்றும் விசாரணை குடித்தொகைப் பரம்பல் தொடர்பான எண்ணக்கருக்கள், பொருளியல் முற்கணிப்பு மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு ஆகியன.

12.5.3 ***பொருளாதார பகுப்பாய்வும் புள்ளிவிபரங்களும் (பாட இலக்கம் 10) - (100 புள்ளிகள்) :***

(i) உற்பத்தி மற்றும் விநியோகித்தல் கோட்பாட்டிற்கு விசேட முக்கியத்துவத்துடன் கூடிய பொருளாதாரக் கொள்கைகள் ;

(ii) பணம், வங்கி முறைமைகள், பன்னாட்டு நிதியிடல் முறைமைகள் மற்றும் வியாபாரம் ;

(iii) நாணயப் பகுப்பாய்வு, நிதி வர்த்தகம் மற்றும் வரிக் கொள்கைப் பகுப்பாய்வு ;

(iv) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு ;

(v) பொருளாதாரத்தின் மீளாய்வு ;

(vi) தொழில்நுட்ப ரீதியான செயல்திறனுடைய மற்றும் செயல்திறனற்ற மனிதவலு மற்றும் வெளிநாட்டு உதவிகள் உட்பட ஏனைய சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றின் பயன்பாடு ;

(vii) பொருளாதார மற்றும் சமூக நிகழ்வுகள் ;

(viii) பொருளாதாரப் பகுப்பாய்வு மற்றும் திட்டமிடலின்போது உபயோகப்படுத்தும் அடிப்படை புள்ளிவிபர எண்ணக்கருத்துக்களும் மற்றும் முறைமைகளும் ;

(ix) பயன்பெறுதல்/ செலவுப் பகுப்பாய்வு ஆகியனவற்றின் கோட்பாடுகள்.

12.5.4 ***செயற்திட்ட திட்டமிடல், அமுல்நடாத்தல், மேற்பார்வை தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல் (பாட இலக்கம் 11) - (100 புள்ளிகள்) :***

(i) செயற்திட்ட திட்டமிடல்களை மேற்கொள்ளல், இனங்காணல், வரையறுத்தல் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், கொள்கைகள், கோட்பாடுகள், அமைவிடங்களைத் தெரிவுசெய்தல், தொழில்நுட்பம், செலவு மற்றும் நன்மைகளை மதிப்பீடு செய்தல், தொழில்நுட்ப நிதியியல் மற்றும் பொருளாதார பகுப்பாய்வு ஆகியன.

(ii) செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல், வழிநடாத்துதல்/ கண்காணித்தல், செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகவும் சரியான நேரத்திலும் நிறைவேற்றல், விபரமான செயற்பாட்டுத் திட்டங்களையும் அமுல்நடாத்தும் அட்டவணைகளையும் தயாரித்தல், தொடர் நடவடிக்கைளையும் முன்னேற்றக் கட்டுப்படுத்தல்களையும் ஒருங்கிணைத்தல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கை எடுத்தல் ;

(iii) செயற்திட்டங்களை மதிப்பீடு செய்தல், செயற்திட்டங்களினதும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் ஒட்டுமொத்தத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் செலவிற்கு ஒப்பீடாக பயன்களைப் பகுப்பாய்வு செய்தல்.

12.5.5 ***நிறுவன ஒழுங்குவிதிகளும் அரச துறையின் நிதியியல் முறைமைகளும் (பாட இலக்கம் - 12) - (100 புள்ளிகள்) :***

(i) அரசாங்க நிதியியல் ஒழுங்குவிதிகள் 1 ஆவது தொகுதி (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த).

(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் - VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிமுறை மற்றும் சட்டங்களின் அத்தியாயங்கள் I தொடக்கம் VI வரையும்.

(iii) இலங்கையின் நிதி நிர்வாகம்.- அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான இலங்கை நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நிதியிடல் கட்டுப்பாடு, அரச நிதி திரட்டிய நிதியம் மற்றும் அதனது செயற்பாட்டின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு, ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிக்கோளும் ஒதுக்கீட்டு முறைமையும், அரசாங்க வருமானம், நிதி அமைச்சரின் அதிகாரமும் வகிபங்கும், திறைசேரியின் அதிகாரங்களும் வகிபங்கும், ஆணைச்சீட்டுக்கள் மற்றும் அதிகாரம்பெற்ற கட்டுநிதி அதிகாரம், கணக்காய்வாளர் நாயகமும் அவரின் அதிகாரங்கள் மற்றும் வகிபங்கு, அரச செலவின செயற்குழு, பொது முயற்சிகள் செயற்குழு ;

(iv) கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நியமனங்களும் அதிகாரங்களும் வகிபங்கும் ;

(v) அரச செலவின் திட்டமிடலும் முகாமைத்துவமும், அமைப்புக்களின் குறிக்கோள்களையும் வகிபங்குகளையும் இனங்காணல், வருடாந்த வருமானங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானங்களை எடுத்தல், அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தில் மாற்றங்களை மேற்கொள்ளல், வீரமொங் வழிமுறையினை செயற்படுத்துதல், அரச துறை பதவி அணியின் முகாமைத்துவம், அரச குறைநிரப்பு மதிப்பீடு ;

(vi) *அரச பெறுகை வழிமுறை.-* பொருட்கள் சேவைகள் மற்றும் வேலை ஆகியனவற்றைப் பெறுதல், கேள்விப்பத்திர குழுக்களையும் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்குழுக்களின் நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள், கேள்விப்பத்திர மதிப்பீட்டு வழிமுறைகள், வெளிநாட்டு நிதியுதவியினால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களின் முகாமைத்துவம் ;

12.5.6 **ஆங்கில மொழி (பாட இலக்கம் 13) - (100 புள்ளிகள்).-** திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் என்பவை தொடர்பான விண்ணப்பதாரியின் கல்வி மற்றும் தொழிற்றுறை தொடர்பான ஆங்கில மொழித் திறமையை அளவிடுவதற்காக ஆங்கிலம் தொடர்பான எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

12.6 **இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் 'ஏ' இன் இணைப்பு)**

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையினைப் பெறுகின்றார்கள்.

இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடங்கள் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 14 |
| 2 | அபிவிருத்தி நிருவாகச் செயற்பாடுகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 15 |
| 3 | முகாமைத்துவத்துக்கான தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பாவனை | 3 மணித்தியாலங்கள் | 16 |
| 4 | இணைப்பு மொழித் தேர்ச்சி | 3 மணித்தியாலங்கள் | 17 |

12.6.1 ***பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்).- (பாட இலக்கம் 14) - (100 புள்ளிகள்).-*** இலங்கையின் அண்மைக்கால பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வரலாற்றில் பொருளியல் மற்றும் சமூகவியல் கோட்பாடுகளைப் பிரயோகித்து பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை வகுத்தலில் தாக்கமேற்படுத்தும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள்

**குறிப்பு.-** இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.6.2 ***அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடு (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்).- (பாட இலக்கம் 15) - (100 புள்ளிகள்).-*** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்பால் விசேட கவனம் செலுத்தி அபிவிருத்தி நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிறுவனங்கள், அவற்றின் இயக்கம் மற்றும் அவற்றிற்கிடையிலான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும் :-

(i) இலங்கையின் அரசாங்க அமைப்பு
(ii) இலங்கை அரசாங்க அமைப்பின் அரசியலமைப்புப் பின்னணி
(iii) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிறுவனங்கள்
(iv) மக்கள் அமைப்புக்கள்
(v) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்

**குறிப்பு.-** இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.6.3 ***முகாமைத்துவத்திற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை - (பாட இலக்கம் 16) - (100 புள்ளிகள்).***- கீழே குறிப்பிட்ட விடயத்துறைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரிசோதித்துப் பார்க்கின்ற இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையாகும் :-

(i) அரச நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனையின் முக்கியத்துவம்

(ii) தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல்

(iii) தரவுத்தள முகாமைத்துவம் மற்றும் தரவுகளை மீளப்பெறல்

(iv) கருத்திட்ட முகாமைத்துவத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை

(iii) முகாமைத்துவ தகவல் முறைமையைத் தயாரித்தல்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.6.4 ***ஆங்கில மொழித் தேர்ச்சி (பாட இலக்கம் 17) - (100 புள்ளிகள்) :-***

Scheme of Evaluation : Written Examination
Content : The following subjects area are suggested for the candidates' reference.

* Communication Skills
The candidate should possess the ability to function effectively in the following language functions :-

- General Greetings and Introductions
- Giving and Getting Information
- Advising, Suggesting and Expressing Opinions
- Telephone skills
- Interviewing skills
- Expression Skills
- Listening and Note taking skills

* Writing Skills
The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study :

- Internal modes of Communication
- Formal Correspondence skills
- Writing Descriptions/Explanations
- Grammar
- Summary writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/Invitations

* Comprehension Skills
Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected :

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (verbal/written)
- Understanding the cohesion and coherence of a passage

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

**12.7 இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 4 ஆவது பின்னிணைப்பு)**

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையினைப் பெறுகின்றார்கள்.

இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடங்கள் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1. | முகாமைக் கணக்கீடு | 3 மணித்தியாலங்கள் | 18 |
| 2. | அரசாங்க பொது நிதி முகாமை | 3 மணித்தியாலங்கள் | 19 |
| 3. | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு | 3 மணித்தியாலங்கள் | 20 |

*12.7.1 **முகாமைக் கணக்கீடு (பாட இலக்கம் - 18) - 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும் (100 புள்ளிகள்) :-***

வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

கணக்கீட்டில் கட்டுப்பாட்டுக் கோட்பாடு பின்னூட்டல், திறந்ததும் மற்றும் மூடியதும், அடிப்படை மற்றும் பிரயோகத்திற்கு உகந்த, நிலையான செலவு முறைகள், செயல்திறன் தரங்கள் மற்றும் மதிப்பீட்டு நியமங்கள் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அவற்றினை ஈடுபடுத்தும் பிரயோக முறைகள், தரத் திருத்தங்கள், கற்றல் வளைவு மற்றும் உள்நோக்கத்தினைத் தீர்மானித்தல், ஆய்வு முரண்களையும் உப முரண்களையும் புகுத்தல், அவற்றின் முக்கியத்துவம், முன்வைத்தல் மற்றும் விசாரணை செய்தல், கட்டுப்பாட்டு கணக்கீட்டு சார் தொழிற்படு வகைகள், வரவுசெலவுத்திட்ட தயாரிப்பிற்கான எண்ணக்கரு, வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு தொடர்பான நிர்வாகம், வரவுசெலவுத் திட்டக் குறியீடு, நிலையான மற்றும் வளைதகு பாதீடு, பிரதான மற்றும் இடைக்கால பாதீட்டு ஆவணம், பாதீட்டு மையம், வரவுசெலவுத் திட்டத்தினைத் தயார்படுத்தலில் முகாமையின் கலந்துகொள்ளல், தலையிடுதல் மற்றும் உள்நோக்கம், பாதீட்டுக் காலமும் பிரதான பாதீட்டுக் காரணிகளை இனங்காணலும்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

*12.7.2 **அரசாங்க பொது நிதி முகாமை (பாட இலக்கம் - 19) - 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும் - (100 புள்ளிகள்)***

வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**அரசாங்க கணக்காளரின் பங்கு :**

அரசாங்க நிதி தொடர்பான அரசியலமைப்பு மற்றும் சட்டவமைப்பு நிர்வாகமைப்பு, மத்திய அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், கூட்டுறவு வியாபாரம் என்பன பற்றிய அறிவு.

பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, பொதுத் திறைசேரியின் கடமைகள், திட்டமிடல் அமைச்சு, மதிப்பீட்டுச் செயற்குழு, கணக்காய்வாளர், அரசாங்க கணக்குக் குழு, திரட்டிய நிதியம், பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் பிரச்சினைகள்.

நிதிச் சுழற்சி, திட்டமிடலுக்கான நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயாரித்தல், வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தல், நிதியியலினை அங்கீகரித்தல், கணக்கிடுதல் நடவடிக்கை, மதிப்பீடு மற்றும் கணக்காய்வு.

செயற்திட்டங்களை மதிப்பீடு செய்தல், சேவை கேள்வி மனு மற்றும் எண் ரீதியான தரவுப் பயன்பாடு, கொடுப்பனவு கோட்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பெறுமானத்தினைத் தீர்மானித்தல்.

செலவுப் பயன் பகுப்பாய்வு, தள்ளுபடி செய்யப்பட்ட பணப் பகுப்பாய்வு, உள்நாட்டு உற்பத்தி விகிதம், நடைமுறையியல் செயற்திட்டங்கள், செயற்திட்டங்கள் தயாரித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பான பொருளாதார நிதியியல் மற்றும் முகாமைத்துவப் பிரிவு, வெற்றிகரமாக செயற்திட்டங்களை முன்வைத்தல்.

நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதன் நுட்ப முறை, வலைய பகுப்பாய்வு முறையினைப் பயன்படுத்தல், வளங்கள் உரிமை மாற்றல், போக்குவரத்து தொடர்பான சிக்கல்கள், பயன்பாட்டிற்கு எடுத்தல் மற்றும் காலப்போக்கில் வீழ்ச்சியடையும் சொத்துக்கள் மற்றும் அவ்வாறு வீழ்ச்சியடையாதவை, என்றாலும் குறித்த காலம் பாவனை செய்த அல்லது காலம் கடந்ததன் பின்னர் அல்லது பயனற்றதாக மாறும் சொத்துக்குப் பதிலாக சொத்துக்களை ஈடுபடுத்துதல், செயலாற்றுகை வரவுசெலவுத் திட்ட அறிக்கை, அடிப்படை முறைமை உருவாக்கம் மற்றும் பயன்பாடு, செயலாற்றுகையினை அளவிடுதல், அளவீட்டு வகைகள், அலகுகள் மற்றும் நிர்ணயங்களைத் தேர்ந்தெடுத்தல், அளவீட்டு முறைகள் மற்றும் செயலாற்றுகைப் பகுப்பாய்வு.

நிகழ்ச்சித் திட்டப் பாதீடு, நிகழ்ச்சித் திட்டக் கட்டமைப்பு, பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தல், நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகள், செலவுச் செயற்திட்டங்கள் மற்றும் செலவு விடயங்கள், பொருளாதார மற்றும் செயல்பாட்டு வகைப்படுத்தல்

நிதிக் கட்டுப்பாட்டு முறை, பொறுப்பாட்சி, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள், உள்ளகக் கணக்காய்வு, வினைத்திறன் கணக்காய்வு, முகாமைத்துவ கணக்காய்வு, மாறிலிப் பகுப்பாய்வு, மூலதன பாதீட்டினைத் தயாரித்தல் தொடர்பான தீர்மானம், நீண்டகால முறைமையினைத் தயாரித்தல் மற்றும் அதன் முக்கியத்துவம், முன்நிகழ்ச்சியிடல், சரிநிலை மற்றும் வரையறைகள், இடர் பகுப்பாய்வு, தீர்மான விருட்சம், நிபந்தனைக்குட்பட்ட காரணிகள்.

மூலதனத்திற்கான கேள்வி, மூலதன உற்பத்தி மற்றும் ஊதியத்தினை மதிப்பிடுவதில் பிரச்சினை, செயற்திட்டங்களை முன்னுரிமைப்படுத்த நிபந்தனையிடும்போது நிச்சயமற்றதாக மாறுதல், திருப்பிக்கொடுக்கும் அணிக்கோவை, பயன் விகிதாசாரத்தினைக் கணக்கிடுதல், தேறிய தற்போதைய பெறுமதி மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட பணப் பரிமாற்றத்தின் நலன்கள், வரி அறவிடலின் தாக்கம், முதலீட்டுக் கணிப்பு, கருத்திட்டச் செலவுக் கட்டுப்பாடு மற்றும் இறுதிக் கணக்காய்வு.

உட்பிரமாணத் தீர்மானங்கள், உற்பத்திக் கலவை, உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தல், உற்பத்தி மாற்று முறைகள், தொழிற்சாலைகளை மூடிவிடல் தொடர்பான பிரச்சினைகள், விலையிடல் கொள்கைகள் மற்றும் பங்களிப்புக் கோட்பாடு, நுகர்வோரின் கேள்விப்போக்கின் தாக்கம், தேவையின் மீள் சக்தி, சந்தைப்படுத்தலின் மூல உபாயம், செயலாற்றுகை மதிப்பீட்டு நுட்பமுறை, இலாபத்தன்மை தொடர்பான அணிக்கோவை மற்றும் விகிதாசாரம்.

செலவின் அநுகூலப் பகுப்பாய்வு, நடப்பு மூலதன முகாமைத்துவம்.

அரசாங்க வணிக வியாபாரங்களின் நிதிக் கட்டுப்பாடு, வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, முகாமைத்துவத்தினை அறிக்கையிடல், கணக்கின் பொருள் விளக்கம் மற்றும் நிதி விகிதாசாரப் பயன்பாடு.

அரசாங்க நிறுவனங்களில் விலையினை நிர்ணயித்தல்

கணக்குத் திட்டத்தினை உள்ளடக்கிய விடயங்கள், அரசாங்க அறிக்கைகள் மற்றும் அரசாங்க வியாபாரங்கள்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.7.3 ***முகாமைத்துவம் மற்றும் அமைப்பு (பாட இலக்கம் - 20) - 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும். (100 புள்ளிகள்)***

வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

முகாமைத்துவம் மற்றும் அமைப்புக் கோட்பாடுகள் தொடர்பாக அபேட்சகரின் அறிவு, அரச பிரிவுகளின் பிரச்சினைகள் மற்றும் வினாக்கள் தொடர்பாக இக்கோட்பாடுகளின் பயன்பாட்டினைப் போன்றே நவீன முகாமைத்துவ உத்திகள் மற்றும் நுட்பமுறைகள் பற்றிய அவரின் அறிவினைத் தீர்மானிப்பதற்காக இப்பாடத்துடன் தொடர்புடைய வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.8 இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பின் "ஈ" பின்னிணைப்பு)

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைத் திட்டமிடல் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

12.8.1 இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :-

| தொடர் இலக்கம் | பாடங்கள் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1. | அபிவிருத்தித் திட்டமிடலின் நுட்பங்கள் | 3 மணித்தியாலங்கள் | 21 |
| 2. | அடிப்படைப் பேரினப் பொருளியல் | 3 மணித்தியாலங்கள் | 22 |
| 3. | தற்போதைய சர்வதேசப் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். | 3 மணித்தியாலங்கள் | 23 |

12.8.2 சேவைப் பிரமாணம் மற்றும் நியமனக் கடிதத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப உரிய காலத்தினுள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பதோடு, சகல பாடங்களிலும் ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான பல தடவைகளின்போது அல்லது தோற்றுவதற்கு அலுவலர் ஒருவருக்கு அனுமதியுண்டு.

12.8.3 வினாத்தாளிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமாகும் பரீட்சை நடைமுறைகள் :

(I) ***அபிவிருத்தித் திட்டமிடலின் நுட்பங்கள் : (பாட இலக்கம் - 21) - (100 புள்ளிகள்)***

(i) ஸ்வொட் (SWOT) ஆய்வு
(ii) பிரச்சினை விருட்சம்
(iii) தர்க்க ரீதியான வேலைச் சட்டக பகுப்பாய்வு
(iv) கிரய - நன்மை பகுப்பாய்வு
(v) திரும்பச் செலுத்தும் முறை
(vi) தேறிய தற்போதைய பெறுமதி
(vii) உள்ளகப் பயன் விகிதாசாரம்
(viii) நிழல் விலையின் பிரயோகம்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(II) ***அடிப்படைப் பேரினப் பொருளியல் (பாட இலக்கம் - 21) - (100 புள்ளிகள்)***

(i) தேசிய கணக்குகள்
(ii) பொருளாதார விருத்தியின் வேகம்
(iii) சமனிலைப்படுத்தப்பட்ட தேசிய வருமானம்

(iv) பெருக்க விளைவுகள்
(v) பண வீக்கம்
(vi) வட்டி விகிதாசாரம்
(vii) அரசிறைமைக் கொள்கைக்கான அறிமுகம்
(viii) இறைமைக் கொள்கைகளுக்கான அறிமுகம்
(ix) வியாபாரச் சக்கரம்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(III) ***தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். (பாட இலக்கம் - 22) - (100 புள்ளிகள்)***

தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். (அவ் அப்போதைய சந்தர்ப்பங்களில் ஏற்படும் உலகப் பொருளாதார நிலைமைகளுக்கு காலத்துக்கேற்ற வகையிலான தலைப்புக்களுக்கு உரித்துடைய விடைகளை வழங்குதல்.)

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. இப்பரீட்சைக்கான பரீட்சை நேர அட்டவணை கீழ்வருமாறு அமைந்துள்ளது :

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 01-I | 2017.05.20 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | இலங்கையின் சட்ட முறைகள் | 01-II | 2017.05.20 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 01-III | 2017.05.21 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-I | 2017.05.21 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | பொருளியல் மற்றும் சமூகவியல் | 03 | 2017.05.27 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடைமுறை | 04 | 2017.05.27 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 2. | இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 05-I | 2017.05.28 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-II | 2017.05.28 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 3. | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2017.06.03 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-III | 2017.06.03 | பி.ப 12.30 - பி. ப. 3.30 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 4. | இலங்கைக் கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத் திறன்காண் தடைப் பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2017.06.03 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-III | 2017.06.03 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 5. | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர் களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | அரசாங்க நிதியியல் வழிமுறை | 06 | 2017.06.10 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | சட்டம் மற்றும் முகாமைத்துவம் | 07 | 2017.06.10 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | நிர்வாகம் | 02-IV | 2017.06.17 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை முன்வைத்தல் | 08 | 2017.06.17 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 6. | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர் களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | திட்டமிடல் எண்ணக் கருக்கள், செயல்முறைத் திட்டம் மற்றும் திட்டமிடும் நிறுவனங்கள் | 09 | 2017.06.24 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | பொருளாதார பகுப்பாய் வும் புள்ளிவிபரங்களும் | 10 | 2017.06.24 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | கருத்திட்டத் திட்டமிடல், அமுல் நடாத்தல், தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல் | 11 | 2017.06.25 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிறுவன ஒழுங்குவிதி களும் அரச துறையின் நிதியிடல் முறைமை களும் | 12 | 2017.06.25 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | ஆங்கில மொழி | 13 | 2017.07.01 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| 7. | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர் களுக்கான இரண்டாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 14 | 2017.07.01 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 15 | 2017.07.01 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| | | முகாமைத்துவத்திற்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை | 16 | விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனப் பணிப்பாளர் நாயகத் தினால் செயல்முறைப் பரீட்சை நடைபெறும் திகதி விண்ணப்ப தாரிகளுக்குப் பின்னர் அறிவிக் கப்படும் | |
| | | இணைப்பு மொழித் தேர்ச்சி | 17 | 2017.07.09 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 8. | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலு வலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | முகாமைக் கணக்கீடு | 18 | 2017.07.15 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அரசாங்க பொது நிதி முகாமைத்துவம் | 19 | 2017.07.15 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு | 20 | 2017.07.16 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| 9. | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலு வலர்களுக்கான இரண்டாம் வினைத் திறன்காண் தடைப் தடைப்பரீட்சை | அபிவிருத்தித் திட்ட மிடலின் நுட்பங்கள் | 21 | 2017.07.16 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | அடிப்படைப் பேரினப் பொருளியல் | 22 | 2017.07.22 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளா தாரத்திற்கு ஏற்படும் தாக்கம் | 23 | 2017.07.22 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |

14.14.1 **வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு உரித்துடைய பாடங்களில் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்தான விலக்களிப்புக்கள் பின்வரும் விதத்தில் செய்யப்பட வேண்டும் :**

| பரீட்சை | பாடம் | விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | சட்டம் | வழக்குரைஞர் (Barrister), உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக இருத்தல். |

**குறிப்பு 1.-** இலங்கை நிர்வாக சேவையின் 2005.11.14 ஆந் திகதிய 1419/ 3 ஆம் இலக்க சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் 2012.07.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.23 ஆந் திகதிவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பின்படி முதலாவது வினைத்திறன்காண் தடையில் சமூகவியல் மற்றும் பொருளியல் பாடங்களுக்கு வழங்கப்படும் விலக்களிப்பு இதற்குப் பொருந்தும்.

14.2 இலங்கை நிர்வாகசேவைப் பிரமாணக் குறிப்பின் 1.5(ஆ) இன் இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, மேற்படி சேவைப்பிரமாணக் குறிப்பானது அமுலுக்கு வரும் திகதியன்று (2012.07.01 ஆந் திகதியன்றுக்கு) முன்னைய சேவைப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின்கீழ் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைச் சித்தியெய்துமாறு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு அதனைச் சித்தியெய்துவதற்கு இயலாமலிருக்கும் அலுவலர்கள் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினதும் பாடங்களுக்கு ஒத்திசையும் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைப் பாடங்களை சித்தியெய்துவதன் மூலம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையினைப் பூர்த்திசெய்தல் வேண்டும். ஒத்திசைவுடைய பாடங்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு | 2013.12.23 ஆந் திகதிய 1842/02 ஆம் இலக்க புதிய சேவைப்பிரமாணக் குறிப்பு |
|---|---|---|
| 1 | சட்டம் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | சட்டம் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| 2 | நிர்வாகம் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | நிர்வாகம் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| 3 | பொருளியல் அல்லது சமூகவியல் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | பொருளியல் மற்றும் சமூகவியல் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| 4 | அரச துறையின் நிதியியல் முகாமைத்துவம் இரண்டாம் (II) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | அரச துறையின் நிதியியல் முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |
| 5 | ஆங்கிலம் முதலாம் (I) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | இணைப்புமொழி தேர்ச்சி இரண்டாம் (II) வினைத்திறன்காண் தடைப்பரீட்சை |

15. **பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த/ தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இலத்திரனியல் ஆவணம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பாக சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட SP/SB/1/13 ஆம் இலக்க மற்றும் 2009.10.13 ஆந் திகதிய சுற்றறிக்கையின்படி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேறு அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டதாக கருதப்பட வேண்டும். அதற்கிணங்க, திணைக்களத் தலைவர்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேற்றின் குறித்த பிரதிகளை அலுவலரின் பிரத்தியேகக் கோவையில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அனுமதிக்கப்படாது.

16. இப்பரீட்சை அறிவித்தல் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமானது பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படும்.

17. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்றது. குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஜே. ஜே. ரத்னசிரி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, மாச்சு 30.

4-445

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.